1. **விருதுநகர், நீலகிரி மற்றும் திருச்சி ஒன்றியங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி விருதுநகர், நீலகிரி மற்றும் திருச்சி ஒன்றியங்களில், பாலிலிருந்து கொழுப்பு பிரித்தெடுக்கும் இயந்திரம், பால்பாக்கெட் தயாரிக்கும் இயந்திரம், கொதிகலன், பால் குளிரூட்டும் இயந்திரம், மின்ஆக்கி, வெண்ணெய் தயாரிக்கும் இயந்திரம் மற்றும் டப்புகள் சுத்தம் செய்யும் இயந்திரங்கள் போன்றவை 1 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும். இதன் மூலம் சுமார் 61,000 பால் உற்பத்தியாளர்கள் மற்றும் 1,50,000 நுகர்வோர் குடும்பத்தினர்கள் பயன்பெறுவர்.

**2. தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் 5 துணைப் பதிவாளர் (பால்வளம்) அலுவலகங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுதல்**

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி 25 சரக துணைப் பதிவாளர் (பால்வளம்) அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. துணைப் பதிவாளர் (பால்வளம்) பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 3 துணைப் பதிவாளர் (பால்வளம்) அலுவலகங்கள் அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வருகின்றன. இதர 22 அலுவலகங்கள், மாவட்ட ஒன்றிய கட்டடங்கள் மற்றும் தனியார் கட்டடங்களில் இயங்கி வருவதால் அடிக்கடி இடமாற்றம் செய்ய வேண்டியதை தவிர்த்து நிரந்தர இடத்தில் இயங்குவதன் மூலம் பொது மக்களுக்கு சிறப்பான சேவையை அளிப்பதற்காக முதற்கட்டமாக நடப்பாண்டில் 5 சரக துணைப்பதிவாளர் (பால்வளம்) அலுவலகங்களுக்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி 3.15 கோடி ரூபாய் செலவில் சொந்த கட்டடம் கட்டித் தரப்படும்.

**3. தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களுக்கு சீருடை செலவு மற்றும் தையற்கூலி உயர்த்துதல்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, தற்போதுள்ள விலைவாசி உயர்வை கருத்தில் கொண்டு தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சீருடை செலவு மற்றும் தையற்கூலி ஆகியவை ஆண்களுக்கு ரூ.890/–லிருந்து ரூ.1,200/– ஆகவும், பெண்களுக்கு ரூ.790/–லிருந்து ரூ.1,100/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களை சேர்ந்த 20,000 பணியாளர்கள் பயனடைவார்கள்.

**4. புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் காஞ்சிபுரம்– திருவள்ளூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல்.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி நுகர்வோர்களுக்கு தரமான பால் வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு தகுந்த இடவெளியில் இயந்திர தளவாடம் மற்றும் பால் வழித்தட குழாய்களை சுத்திகரிக்கும் வசதி, குளிர்சாதன வசதி, உயர்மின் அமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் பொருட்டு புதுக்கோட்டை ஒன்றியத்தில் ரூ.1.21 கோடி, சிவகங்கை ஒன்றியத்தில் ரூ.1.54 கோடி மற்றும் காஞ்சீபுரம்–திருவள்ளூர் ஒன்றியத்தில் ரூ.72 இலட்சம் ஆக மொத்தம் ரூ.3.47கோடி செலவில் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் சுமார் 42,000 பால் உற்பத்தியாளர்கள் மற்றும் 50,000 நுகர்வோர் குடும்பத்தினர் பயன் பெறுவார்கள்.

**5 . பால் உற்பத்தியாளர்களின் கறவைமாடுகளுக்கு இலவசமாக கொட்டகை மற்றும் சங்கங்களில் பொது கறவல் கூடம் கட்டுதல்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்கும் உறுப்பினர்களின் கறவை மாடுகள் முறையாக பராமரிக்க 5,000 உறுப்பினர்களுக்கு அரசு நிதி உதவியுடன் கால்நடை கொட்டகைகள் கட்டி வழங்கப்படும்.

மேலும், சுகாதாரமான முறையில் தரமான பால் கறவல் மற்றும் கொள்முதல் செய்யப்படுவதை உறுதி செய்யும் வகையில் 25 கறவை மாடுகள் வரை கட்டி பால் கறக்க போதுமான பொது பால் கறவல் கூடங்கள் 100 தொடக்கப் பால் கூட்டுறவு சங்கங்களுக்கு கட்டி வழங்கப்படும்.

**6 . தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் பயனடையும் வகையில் பால் கேன்கள் மற்றும் கிட்டிகள் வழங்குதல்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்கும் உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில் 20.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 125 பால உறபத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு 500 துருவுறா பால்கேன்களும் (அரசு மானியம் ரூ.10.00 இலட்சம் மற்றும் பயனாளி சங்கம் ரூ.10.00 இலட்சம்) மற்றும் கால்நடை மருத்துவ சிகிச்சைக்கு பயன்படும் கிட்டிகள் 1.50 கோடி ரூபாய் செலவில் 1,000 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படும்.

**7. மாதவரம் பால்பண்ணையில் மழை நீர் சேகரிப்பு குட்டைகள் ஏற்படுத்துதல்.**

மாதவரம் பால்பண்ணையில் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும், அதில் உள்ள கனி தரும் மரங்களுக்கு தேவையான நீர் ஆதாரத்தை மேம்படுத்தும் விதமாகவும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, பழத்தோட்ட பகுதியில் **5.00** இலட்சம் ரூபாய் செலவில் மழைநீர் சேகரிக்கும் குட்டைகள் அமைக்கப் படும்.

**8 . பால்பண்ணைகளில் பசுமை முனைப்பு திட்டங்கள்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, சுற்றுச்சூழல் தூய்மையை கருத்தில் கொண்டு பசுமை பண்ணை முனைப்பின் கீழ் 100 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு சூரிய ஒளி செரிவூட்டிகள் நிறுவப்படும். மேலும், 50 மொத்த பால் குளிர்விப்பான் நிலையங்களுக்கு தேவையான சுடுநீர் தயாரிக்க ஒவ்வொன்றும் 500 லிட்டர் கொள்ளவு கொண்ட சூரிய ஒளி கொதிகலன்கள் 57.50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப் படும்.